ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2255/16 – 2021 නොවැම්බර් 24 වැනි බදාදා – 2021.11.24
*2255/16 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2007.01.25* ஆந் திகதிய வர்த்தமானியில் தினேஷ் சந்திர குணவர்த்தன (நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல்) அமைச்சராகவிருந்த வேளை 269 ஆம் அத்தியாயமான நகர மற்றும் கிராமிய அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) மற்றும் 21 (2) ஆம் பிரிவுகளின் கீழ் "சிதுல்பவ்வ நகர அதிகார பிரதேசம்" என பிரகடனப்படுத்தியதை இதன் பின்னர் "சிதுல் பவ்வ புனித பூமி " என பிரகடனப்படுத்தும் வர்த்தமானப் பத்திரிகை.**

**அம்பாந்தோட்டை மாவட்டத்தில் யால தேசிய வனவியல் பூங்காவில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க சிதுல்பவ்வ ரஜமகா விகாரைக்குரிய புனித பிரதேசத்தைப் புனித பூமியாகப் பிரகடனப்படுத்துதல்**

*2148/42 ஆம் இலக்க மற்றும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து 13 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி*

*2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2148/42 இல் வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள புனித பூமி பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசம் நீண்ட கால பாதுகாப்புக்கான பிரதேசமாகவும்; அது "வரலாற்று சிறப்புமிகு சிதுல்பவ்வ ரஜமகா விகாரை புனித பூமி" எனவும் பிரகடனப்படுத்தபடுகிறது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர்.*

*புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு,*
*இல.135, அநாகரிக தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07.*
*2021, யுன் 23.*

1A – G35413– 15 (2021/11)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### வரலாற்று சிறப்புமிகு சிதுல்பவ்வ ரஜமகா விகாரை புனித பூமியினை உள்ளடக்கும் பிரதேசங்கள்

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹராம பிரதேச செயலகப் பிரிவில் பவட்டுபன, மகம் பற்று கிராமத்திலுள்ள சிதுல்பவ்வ ரஜமகா விகாரைக்குச் சொந்தமான கிராமத்திலுள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2004.12.03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட H/TSS 2004/841 ஆம் இலக்க இரேகை வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் எல்லைகளினைக் கொண்ட மொத்தப் பிரதேசம்.

மேற்கு : ஆரம்பப் புள்ளி நில அளவையாளர் நாயகத்தின் 2004/841 ஆம் இலக்க இரேகை வரைபடத்தின் 32 ஆம் இலக்க காணித் துண்டினைக் கொண்டுள்ள காணியின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் இடம்;

அங்கிருந்து துண்டு இல.32 இன் மேற்கு எல்லையில் முறையே 848 மீற்றர் வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு மீண்டும் வடக்கு, கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்கு மீண்டும் துண்டு இல.30 இன் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் வரையும் கடகமுவ மாவத்தையின் இடது பக்க எல்லையினை ஊடறுத்து வடமேற்கே துண்டுஇல.30 இனைக் கொண்ட காணியின் மேற்கு எல்லையின் 16 மீற்றர் இலிருந்து, கடகமுவ மாவத்தையின் வலது பக்க எல்லையினை சந்திக்கும் இடமாகும் என்பதுடன் வடகிழக்காக உள்ள மேற்குறித்த காணித் துண்டு இல. 24 இன் மேற்கு எல்லையின் 336 மீற்றர்களிலிருந்து துண்டு இல. 24 கொண்ட காணியின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் இடம் ;

வடக்கு : மேற்கு எல்லையின் இறுதிப் புள்ளியிலிருந்து மேற்கூறிய நிலத்தின் வடக்கு எல்லையில் துண்டு இல. 24 இல் வடகிழக்கு மற்றும் தென்கிழக்கில் முறையே 552 மீற்றர் தூரம்;

கிழக்கு : காணியின் கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகள் சந்திக்கும் மேற்குறித்த காணித் துண்டு இல.33 இன் கிழக்கு எல்லையுடன் வடகிழக்கு நோக்கியதான 300 மீற்றர்களிலிருந்து, முடிவடையும் இடத்திலிருந்து புள்ளியில் இருந்து துண்டு இல.24 இனைக் கொண்டுள்ள காணியின் கிழக்கு எல்லையில் வடகிழக்கு மற்றும் வடமேற்கில் முறையே 620 மீற்றர் தூரத்தில் இல.33 ஐக் கொண்ட காணியின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் இடமாகும்;

தெற்கு : முறையே வடமேற்கு மற்றும் தென்மேற்கின் ஆரம்ப இடங்கள் சந்திக்கும் காணித் துண்டு இல.32 இன் தெற்கு எல்லையின் 104 மீற்றர் தூரத்திலிருந்து, காணித் துண்டு இல.32 இன் தெற்கு மற்றும் கிழக்கு மற்றும் மேற்குறித்த காணியின் தெற்கு எல்லை வரை காணித் துண்டு இல.31 இன் தெற்கு எல்லையிலிருந்து வடமேற்கு எல்லை வரையிலான 16 மீற்றர் வீதி ஊடறுக்கும் இடத்திலிருந்து கிழக்கு எல்லையின் துண்டு இல.33 இனைக் கொண்ட காணியின் தெற்கு எல்லைக்கான முடிவு இடத்திலிருந்து துண்டு இல.33 இனைக் கொண்ட காணியின் தெற்கு எல்லையின் வடமேற்கே 336 மீற்றர் தூரத்திலுள்ள கதிர்காமம் யதகண்டிய வீதியின் வலது பக்க எல்லை வரை.

*12-103*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.